பொதுசன நூலகம்
பகுதி
யாழ்ப்பாணம்

★ இந்திய அரசின் துரோகத்தை மறக்கமுடியாது

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL_TAMIL DAILY

மலர் 38 திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாதி 11 இதழ்: 228
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 27-9-1991

## மாத்தயா உரை

(யாழ்ப்பாணம்)
கடந்த நான்கு வருடங்களுக்கு முன்பு இருந்த நிலையை நினைத்துப்பார்க்கிறேன். எங்கள் விடுதலைப் போராட்டத்தின் நியாயங்களை, தர்மங்களைப் புரிந்துகொள்ளாமல், இந்திய அரசு தன்படைகளை இங்கு குவித்திருந்தது. அதே நேரம் சிறிலங்கா அரசோ தன் அடக்குமுறை வடிவங்களை மேலும் பலமாக்கிக் கொண்டிருந்தது. அந்த நிலையில் எமது விடுதலைப் போராட்டம் அசைய முடியாத நெருக்கடிக்குள் நின்றது.

இவ்வாறு திரு. கோ. மகேந்திரராசா [மாத்தயா] தியாகி திலீபனின் 4ம் ஆண்டு நினைவு தினத்தில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில் குறிப்

(3-ம் பக்கம் பார்க்க)

## பிரேமா அரசு நிச்சயம் கவிழும்

[கொழும்பு]
ஐக்கியதேசியக் கட்சிக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை நிச்சயம் வெற்றியடையுமென்று லிபரல் கட்சித் தலைவர் சாணக அமரதுங்க தெரிவித்தார்.

இந்தப் பிரேரணைகரு ஆளும்

4-ம் பக்கம் பார்க்க)

“தமிழர் தாயகத்தை அங்கீகரித்த

# பூரண சுயாட்சி அமைப்பை பரிசீலிக்கப் புலிகள் தயார்”

## கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அறிவிப்பு

[நமது நிருபர் மணிசேகரன்]

“தமிழர் பிரச்னைக்கு தீர்வாக எமது தாயகத்தை அங்கிகரித்து, பூரண சுயாட்சியுடைய சமஷ்டி அமைப்பை நாங்கள் பரிசிலிக்கத் தயாராக இருக்கிறோம்” என விடுதலைப் புலிகளின் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

நேற்று நல்லூரில் நடைபெற்ற தியாகி திலீபன் 4-வது ஆண்டு நினைவுதின நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

பெருந்திரளான மக்கள் திரண்டிருந்த இந்தக்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

“எமது தாயகத்தை அங்கீகரித்து பூரண சுயாட்சியுள்ள அரசாங்கத்தை உருவாக்க எமது இயக்கம் கொண்டுள்ள கருத்தை மேற்குலகநாடுகளும் ஏற்றுக்கொண்டுள்ளன.

### தலைவர் கருத்து

பேச்சுவார்த்தை என்று ஒன்று வந்தால் அரசியல் பேச்சுவார்த்தைக்கு முன்பு முதற்கட்டமாக பொருளாதாரத் தடை, குடியேற்றத் திட்டம் வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவற்றை தீர்க்க சிங்கள அரசு முன்வரவேண்டும் என்று

(4ம் பக்கம் பார்க்க)

## எதற்கும் முகம்கொடுக்க அரசு தயார்

(கொழும்பு)
அரசுக்கு எதிரான எந்த வகையான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கும் வெற்றிகரமாக அரசு முகம் கொடுக்க எந்நேரமும் தயாராக இருப்பதாக பத்திரிகைகளுக்குப்பேட்டியளித்தபோது ஐ. தே. கட்சிச் செயலாளரும், வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சருமான திரு. சிறிசேனகூரே தெரிவித்தார்.

இவ்வாறான பிரேரணைகளை தாங்கள் எதிர்பார்த்ததாகவும் இதனைச் சந்திக்கத் தாம் எந்தவேளையிலும் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (153)

## புலிகள் கடிதம் தொண்டா பெற்றார்

[கொழும்பு]
விடுதலைப் புலிகளிடமிருந்து இரண்டாவது கடிதத்தைத் தாம் நேற்று முன் தினமிரவு பெற்றதாக அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தை நடத்த தாங்கள் தயாராயிருப்பதாக

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் பேச அரசு தயார்

(புதுடில்லி)
“இலங்கை இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண புலிகள் அமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்த நாம் தயாராகவுள்ளோம்”

இவ்வாறு இந்தியாவுக்கான இலங்கை உயர் ஸ்தானிகர் டாக்டர் நெவில் கனகரட்ண கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; பேச்சுவார்த்தை நடத்துவது தொடர்பாக அதிகார பூர்வமான பதிலை விடுதலைப் புலிகள் தலைமைப் பீடத்திலிருந்து எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தேர்தல் நடத்தப்பட வேண்டும். தேர்தல் முடிவில் விடுதலைப்புலிகள் வெற்றி பெறும்பட்சத்தில் திரு. பிரபாகரனை முதலமைச்சராக தெரிவுசெய்துகொள்ள முடி

(3-ம் பக்கம் பார்க்க)

## இந்திய இலங்கை ஒப்பந்தம்

### எம்மாம் அமுல்படுத்த முடியாது

- பிரதமர் நரசிம்மராவ் பேட்டி

[சென்னை]
இந்திய இலங்கை ஒப்பந்தத்தை உடனடியாக இந்தியாவால் அமுல்படுத்தமுடியாது என்று இந்தியப் பிரதமர் திரு. பி. வி. நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்.

‘புரன்ட்லைன்’ சஞ்சிகை ஆசிரியர் திரு. என் ராமுக்கு அளித்த பேட்டியிலே அவர் இவ்வாறு கூறினர்.

அப்பேட்டியில் அவர்மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கை இந்திய ஒப்பந்தம் இப்பவும் நடைமுறைப்படுத்தலாம். ஆனல் ஒரு தரப்பினரால் அமுல்படுத்த முடியாது.

இலங்கை அரசு தற்போது

(4ம் பக்கம் பார்க்க)

## திலீபன் 4-வது நினைவுநாள் உணர்ச்சியுடன் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)
தமிழ் தியாகி திலீபன் 4-ம் ஆண்டு நினைவு இறுதிநாள் நிகழ்ச்சிகள் நேற்று யாழ். குடாநாடெங்கும் உணர்ச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டன.

நேற்று இறுதிநாளாக நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் காலை முதல் பிற்பகல்வரை திலீபன் நினைவாக நடைபெற்ற உண்ணாவிரதத்தில் ஆயிரக்கணக்கான பொதுமக்களும், போராளிகளும் கலந்துகொண்டார்கள்

தியாகி திலீபன் உயிர்த்தியா

(4-ம் பக்கம் பார்க்க)

## நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றிபெறும்

[கொழும்பு]
அரசுக்குஎதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் தமக்கு ஆதரவாக கூடுதலான வாக்குகள் கிடைக்குமென்று எதிர்க் கட்சிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளன.

அரசு எம். பிக்கள் பலரது ஆதரவும் தங்களுக்கு உண்டென்று எதிர்க்கட்சிகளின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதம் வெகு விரைவில் நாடாளுமன்றத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (153)

## சர்வதேச சமூகத்தின் மத்தியஸ்தத் துடன்பேச்சு நடத்த புலிகள் தயார்

[கொழும்பு]
சர்வதேச சமூகத்தின் மத்தியஸ்தத்துடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு தாங்கள் தயாராயிருப்பதாக அமைச்சர் தொண்டமானுக்கு புலிகள் தெரிவிக்கவிருப்பதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகள் விவகாரத்தில் இலங்கைஒத்துழைக்கவில்லை

(சென்னை)
விடுதலைப்புலிகள் விவகாரத்தில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை குறித்து இலங்கை அரசிடமிருந்து திட்டவட்டமான யோசனை எதுவும் தமக்குக் கிடைக்கவில்லையென இந்திய வெளிவிவகார இணை அமைச்சர் எட்வர்டோ

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### வைத்திய நிலையம்

வேலணையிலும் புளியங் கூடல் சந்தியிலும் இயங்கிய நடன முருகன் வைத்திய நிலையம் யாழ்ப்பாணம் சத்திரச் சந்தி, கொட்டடி றோட்டில் இயங்கி வருகின்றது. தொடர்பு; டாக்டர் கந்தையா நவரத்தினம்.

(சி-5391)

### ஆண்டு 5

பிரபல பாடசாலைகளுக்கான மாதிரி அனுமதிப் பரீட்சை புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் தமிழ், கணிதம், ஆங்கிலம்) 29-09-91 ஞாயிறு வெளியிடப்படும். பதிவு செய்து பெற்றுக்கொள்ளவும். 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-5405)


## மணலாறில் ஐந்து புலிகள் வீரமரணம்

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடனான மோதலில் நேற்று முன்தினம் 7 போராளிகள் வீரமரணமடைந்தனர்.

மகிலன் - (ராமலிங்கம்: பொன்குமார், கொழும்புத்துறை), வரதப்பா - (தங்க வேலாயுதம், விஜயராஜன், மல்லாகம்), மலேசியன் - (இராஜேந்திரம், திவாகரன், கரணவாய் தெற்கு), விக்ஸம் - (இளங்கோ, பரணிதரன், கரவெட்டி). ரஞ்சன் (சுந்தரம் சண்முகதாசன், வாழைச்சேனை), தமிழ்வாணன், குலம், மட்டக்களப்பு), அற்புதன் - தம்பலகாமம்) நேற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த குணசீலன் - (இராசா, குமார், முல்லைத்தீவு) வீரமரணமடைந்தார் இவர்களுக்கு புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றார்கள். (வி)

## இராசி பலன்

27-09-1991

வெள்ளிக்கிழமை

தமிழுக்குபுரட்டாதி 11

சதுர்த்தி பி- இ. 12 வரை, பரணி மு. இ. 10-54 வரை, சித்தயோகம், இராகுகாலம் காலை 10 32 முதல் 12-02 வரை சுபநேரம் காலை 6.02 முதல் 7:32 வரை.

மேடம்;- கலையுலக தொடர்பு, பொருள்வரவு, குடும்பசுகம்.

இடபம்:- மனக்கலக்கம், தொழில் கஷ்டம், வெறுப்பு.

மிதுனம்:- அறிஞர் நட்பு, சகோதரர் வரவு, தெய்வீக செலவு,

கடகம்:- கண்ணில்ரோகம், வாக்குப்பகை. பயணம்.

சிங்கம்:- புகழ் யாத புதிர், பகைவர் துன்பம், அடம்பிடித்தல்.

கன்னி:- தவறான போக்கு, வீண்தொல்லை, குடும்பக்கவலை,

துலாம்:- தொழில் உறவு, கிரகப்பிரவேசம், மரியாதை.

விருச்சிகம்:- விதண்டாவாதம், தொழில் லாபம், காரியசித்தி.

தனுசு:- புத்திரர் பகை. உடல்சோர்வு மனக்குறை.

மகரம்:- பணத்தகராறு, வயிற்றுவலி, குடும்பப்பிரிவு

கும்பம்:- மாமியார் புகழாரம், குடும்ப உல்லாசம் வஸ்திரலாபம்.

மீனம்:- யோசனை மிகுதி, மனைவியால்துயர் பயம்.

ஜோஸ்யர்


யாழ். பல்கலைக்கழகம்

## யாழ் பல்கலைக்கழக ஆய்வு நூல்களின் விற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது ஆய்வுகளை பிரசுரங்களாக வெளியிடுவதுடன் அவற்றை விற்பனை செய்யவும் ஆரம்பித்துள்ளது. இதன் முன்னோடியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ் முதுநிலை விரிவுரையாளராக பணிபுரியும் திரு. எஸ். சிவலிங்கராஜா (M. A) அவர்களால் ஆய்வுசெய்து வெளியிடப்பட்டுள்ள "வித்துவ சிரோமணி கணேசையரின் வாழ்க்கையும் பணியும்'' என்னும் நூல் யாழ். பல்கலைக்கழகத்தின் வரவேற்புப் பகுதியில் விற்பனைக்குள்ளது. பிரதியொன்றின் விலை ரூபா 30/- ஆகும். வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். வியாபாரிகள் நிதியாளரிடம் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இதனை தபால் கட்டளை/காசுக்கட்டளை ஆகியவற்றை அனுப்பி தபால் மூலமாகவும் பெற்றுக்கொள்ள முடியும்: தபால்மூலம் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் சாதாரண தபால் செலவாக ரூபா 4/- மேலதிகமாக செலுத்துதல் வேண்டும். தபால் கட்டளை/காசுக்கட்டளை நிதியாளர், யாழ் பல்கலைக்கழகம் என்ற பெயரில் இருத்தல் வேண்டும்.

பின்வரும் ஆய்வுகள் அச்சில் உள்ளன.

1. பண்டைய தமிழகம்
   கலாநிதி எஸ். கே. சிற்றம்பலம்
2. நூலகவியலில் பட்டியலாக்கம்
   திருமதி வி. பாலசுந்தரம்
3. இறால் வளர்ப்பு (Shrimp Culture)
   கலாநிதி கே. சிற்றம்பலம்

- பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம். (எ 1602)


## 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



★

அன்னையின் மடியில்:

08-12-1966

ஆண்டவன் பிடியில்:

28-08-1991

★

### செல்வன் மாசிலாமணி ரவிராஜ்

(பபியன்)

நயமுறு வார்த்தை சேர்த்து நயம்படப்பேசி
நண்பர் உளமெலாம் உறைந்தாய் மற்றும்
பயனுறு காரியங்கள் பலப் பலசெய்தாய்-யாரும்
இகழ்ந்திட வாழ்ந்தாயில்லை
இனிமையாய் வாழ்ந்தாய்!
சோதரி 'றஞ்சுவும்'மாள பாலகி ரம்யாவை-நீ
தோளிலே சுமந்து அன்பு பொழிந்ததை
மறந்தா-இன்று
காலிலும், வயிற்றிலுமாய்க் கடும் ரணமுற்றதோடு
ஓரிரு மாதங்கட்குள் இவ்வுலகினை
விட்டொழிந்தாய்
உன் வெற்றிடம் நிரப்புவதற்கு வேறொரு
ஆளுமில்லை-உன்னில்
பற்றுதல் கொண்ட ரம்யா "பபி மாமா''
என்றழைக்க இப் பாரினில் நீயோ இல்லை!
மற்றவர் போற்ற வாழ்ந்த மாசிலா மணியின்
மைந்தா
உன் வெற்றுடல் காணுமுவர் வெதும்பினர்
வேற்று நாட்டில்
பட்டதே உந்தன்வாழ்வு பதைத்ததே
நெஞ்சமெல்லாம்
சுட்டது தீயும் உன்னை நீ துவண்டு மடிந்தனையோ?
ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!

உன் பிரிவால் வாடும்:
தாய், சகோதரர்கள், நண்பர்கள், உறவினர்கள்.

மா. லீலாவதி,
நலாவத்தை,
தெல்லிப்பழை கிழக்கு. (சி-5407)

## திருமலை தாக்குதலில் 3 சிப்பாய்கள் பலி

(திருமலை)

திருமலை முதலிக்குளம்பகுதியில் விமானப்படையினரின் வாகனம்மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 3 சிப்பாய்கள் கொல்லப்பட்டதுடன் பல ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

இத்தாக்குதலில் புலிகள் தரப்பில் மேஜர் ஜீவா வீரமரணமடைந்தார்.

நேற்றுக்காலை 7-45 மணியளவில் முதலிக்குளம் பிரதான விமானப்படை முகாமிலிருந்து பன்சாலை விமானப் படை முகாமுக்கு படையினர் வாகனத்தில் செல்லும்போது புலிகள் இடைமறித்து தாக்கியதில் 3 விமானப்படை சிப்பாய்கள் அதே இடத்தில் கொல்லப்பட்டதுடன், பல ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றினர்.

இம்மோதலில் வீரமரணமடைந்த மேஜர் ஜீவாவுக்கு புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றனர்.

இதேநேரம் நேற்று மட்டக்களப்பில் சத்துருக்கொண்டானில் புலிகள் இராணுவத்தினர் மீது மேற்கொண்ட தாக்குதலில் மூன்று இராணுவச் சிப்பாய்கள் படுகாயமடைந்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன (வி)


## நாமம் சொல்லுவோம்

"நாமம் சொல்லுவோம் சிவ நாமம்
சொல்லுவோம்
நாமம் சொல்லுவோம் நமனை வெல்லுவோம்"

நற்சிந்தனையில் யோகர் சுவாமிகள் நாமஞ் சொல்வது என்னும் அருமையான ஆறுல் இலகுவான சாதனையை விளக்கும் நூல் 28-9-91 சனிக்கிழமை மாலை 4 மணியளவில் தாவடி ஸ்ரீ ஸத்ய ஸாயி ஸேவா ஸமித்தியில் நிகழும் ஷீர்டி ஸாயி பாபா ஜயந்தி தின விழாவில் நாம பஜனையின் பின்பு வெளியிடப்படும். விற்பனையும் இடம்பெறும்.

(சி- 5406)


## 3ம் ஆண்டு சோக அலைகள்



### கீதன்

(சகாதேவன் செல்வக்குமார்)

படைப்பு: 9-11-1967

அழிப்பு: 23-9-1988

கீதன் உமது புன்சிரிப்பு முகத்தைப் பார்த்து ஆண்டுகள் மூன்று இன்றுடன் நிறைந்தது.

கீதன் இன்று இப்புவியில் வாழ்வதைவிட இறப்பதே மேலென்றெண்ணி வாழும் வயதில் எம்மை இருள் சூழ்ந்த உலகில் விட்டுப்பிரிந்தீரோ சிறு வயதில் பல தொழிலும் கற்றுப் பண்பாய் நடந்த உமக்கா இக்கெதி நேர்ந்தது.

முற்பிறப்பில் நாம் செய்த பழி யாதோ இப்பிறப்பில் யார் தான் செய்த பழியோ நாம் அறியோமே இருள் சூழ்ந்த இப்புவியில் நீதிகேட்க யாரும் இல்லை நீர் சென்ற நாள் முதலாய் ஒளி இழந்த நாம் கண்ணீரால் நீர் இறைத்து புவிநனைத்து நீர் போன வழிதெரியா நிலைகுலைந்து நீ போன வழிதேடி நிற்கும்

உமது பிரிவால் துயரும்
உம்மைப்பெற்றெடுத்த அம்மா, அப்பா
சகோதரர்கள்:- கண்ணன், ருதா, ஜெயா,
சூட்டி, அண்ணி,
பெருமக்கள் (சாம்பவி, மதுரா,) நண்பர்களும்.

அ. சகாதேவன்,
இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.
(கீதன் சூட்டி மோட்டார் சயிக்கிள் பழுதுபார்ப்பவர்கள்) (சி- 5408)

## மாமனிதர் கலைஞானியின்
# அரும்பொருட் கண்காட்சி இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மாமனிதர் கலைஞானியின் அரும் பொருட் கண்காட்சி இன்று 27ம் திகதி வெள்ளிக் கிழமையாழ்ப்பாணப்பல்கலைக் கழக இந்து மன்றத்தினரால் நடாத்தப்படவிருக்கிறது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக நூல் நிலைய மண்டபத்தில் இன்று காலை 9 மணிக்கு யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா கண்காட்சியை ஆரம்பித்து வைப்பார்.

யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை, யாழ். பல்கலைக்கழக நூலகர் திரு. சி. முருகவேள் ஆகியோர் குத்துவிளக்கேற்றி வைப்பார்கள்.

மாமனிதர் கலைஞானியின் அரும்பொருட்கண்காட்சி 27ம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 6ம் திகதி வரை பத்து நாட்கள் நடைபெற உள்ளது.

கலைஞானி மிக அரும்பாடு பட்டுசேகரித்ததொல்பொருட்கள் இக்கண்காட்சியில் இடம் பெறுகின்றன. (56)

## திலீபனின் தியாகத்தின் மூலம்
# இந்தியாவின் துரோகத் தனத்தை உலகம் அறிந்துகொண்டது!

**- கரிகாலன்**

(யாழ்ப்பாணம்)

"இலங்கை இராணுவம் தென்தமிழீழத்தையும் வட தமிழீழத்தையும் பிப்பதற்கு மணலாற்றில் பெரும் போர் நடத்துகிறது.. இந்தப் போரில் நாம் வெல்லாது போனால் தென்தமிழீழமக்கள் படும் துயரங்கள், துன்பங்கள் போன்று வடதமிழ்ஈழமக்கள் அனுபவிக்கவேண்டிவரும்''.

இவ்வாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல் நிர்வாக பொறுப்பாளருமான கரிகாலன் நேற்றுமுன்தினம் நல்லூரில் நடைபெற்ற தியாகி திலீபன் நினைவஞ்சலிக்கூட்டத்தில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: வடபிரதேசம் இன்று விடுவிக்கப்பட்ட பிரதேசமாக இருக்கிறது. இன்று ஸ்ரீலங்கா அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் பொருளாதாரத் தடையை சகித்து ரகெண்டு மக்கள் சுதந்திரமாக வாழ்கிறார்கள்.

ஆனால் தென்தமிழீழத்தில் தமிழ் மக்கள் சிங்களக் காடையர்களாலும், முஸ்லீம்களாலும் சாகடிக்கப்படுகிறார்கள். சொத்துக்கள், வீடுகள் சேதமாக்கப்படுகின்றன. 37 தமிழ்க் கிராமங்கள் முற்றாக அழிக்கப் பட்டுள்ளன; என்னவாக இருந்தாலும் அங்கு வாழும் மக்கள் அந்த மண்ணிலேயே மடியவேண்டுமென்றஎண்ணத்துடன் இருக்கிறார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 7000 பொதுமக்கள் சாகடிக்கப்பட்டுள்ளார்கள்; ரயர் போட்டு எரிக்கப்படுகிறார்கள். வீதியோரங்களில் சாக்குகளில் அவர்களது உடல்கள் வீசப் படுகின்றன.

திலீபனின் தியாகத்தின் மூலம் இந்தியாவின் துரோகத் தனத்தை உலகம் அறிந்து கொண்டது என்றார். [152]

### புலிகளுடன்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யும்.

அதிகாரப் பரவலாக்கல் செய்யவேண்டிய காலம் வந்து விட்டது இதை நாம் வெகு விரைவில் செய்துவைப்போம் என்றார்.

### இந்திய அரசின்
2ம் பக்கத் தொடர்ச்சி]

பிட்டார். அங்கு அவர் மேலும் பேசுகையில்,

இந்த நிலையில்தான் திலீபன் தனது உண்ணா நோன்புப் போராட்டத்தை ஆரம்பிக்கிறான். அகிம்சையின் தந்தை என்று வர்ணிக்கப்படும் காந்தியின் தேசத்திற்கு அதன் வழியிலேயே போராட்டத்தின்முதலடியை திலீபன் தொடுத்தான்.

எங்கள் விடுதலைப் போராட்டம் பல சோகமான பாகங்களைக் கடந்து வந்தது: உலகின் எந்த விடுதலைப் போராட்டமும் சந்தித்திராத அளவு துரோகங்களை நாம் சந்தித்தோம். அடிக்கடி துரோகங்களைச் சந்தித்து. அதற்கூடாக வளர்ந்தது தான் எங்கள் இயக்கமும்—எங்கள் தேச விடுதலைப் போராட்டமும் ஆகும். அந்த வகையில், எங்களுக்கு மிகப்பெரும் துரோகத்தை இந்திய அரசு செய்தது என்றார். [152-56]

## "திலீபன் கனவை நினைவாக்க
# தமிழ்மக்கள் முழுமையாக எம்மோடு இணையவேண்டும்

(யாழ்ப்பாணம்)

"யாழ். மாவட்டத்தில் இலங்கை இராணுவம் இராணுவ நடவடிக்கை எடுக்கலாம் அதற்கெதிராக இளைஞர்கள், யுவதிகள், வயோதிபர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து போரிடுவதற்கு முன் வரவேண்டும்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளரான திரு. பரா நல்லூரில் நடைபெற்ற திலீபன் நினைவஞ்சலிக்கூட்டத்தில் பேசும் போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: இன்றுஇலங்கை அரசாங்கம் பொருளாதாரத் தடையை ஏற்படுத்திஉள்ளது. மண்ணெண்ணை, சவர்க்காரம், இல்லாத கஷ்டங்களும் சில இடங்களில் ஒரு வேளை உணவு கூட உண்ணாமல் இருக்கும் மக்களோ இந்த நாட்டை விட்டு ஓடவில்லை பயந்தவர்களும், காட்டிக்கொடுத்தவர்களும் இந்த நாட்டைவிட்டு ஓடினார்கள்.

தியாகி திலீபன் கனவை நனவாக்க வேண்டுமானால். தமிழ் மக்கள் முழுமையாக எம்மோடு இணையவேண்டும்'' என்றார். (152,56)

JAFFNA COLLEGE CEYLON 1823 1872

**யாழ்ப்பாண கல்லூரி,**
**வட்டுக்கோட்டை.**

## பொருளியல் ஆசிரியர் தேவை

யாழ்ப்பாணக் கல்லூரி உயர்தர வகுப்புக்களில் கற்பிக்க பொருளியற்றுறை சிறப்புப் பட்டதாரி தேவைப் படுகின்றார்.

05-10-1991 சனிக்கிழமைக்கு முன் விண்ணப்பிக்குக

அதிபர்

கல்லூரிப் பூங்கா,
வட்டுக்கோட்டை.

(ஏ 1606)

# செஞ்சிலுவைச் சங்கம்

## இருளை அகற்றி, துன்பங்களுக்கு முகம் கொடுக்கின்றது



முல்லைத்தீவு
வவுனியா
கிளிநொச்சி
மன்னார்
யாழ்ப்பாணம்

# இருளை அகற்றி ஒளி ஏற்றிட

வட மாவட்டங்களிலுள்ள மக்களின் கண்ணிரைத் துடைத்திட செஞ்சிலுவைச் சங்கத்தின் சேவையை நிறைவேற்றிட உங்களின் தாராள அன்பளிப்பை நல்குக.

## இவ்வாரம் செஞ் சிலுவை செம்பிறை கொடிவாரம்

எம் சேவைகள்:

| | | |
|---|---|---|
| உயிர்காப்பு! | தொண்டர் சேவை! | பொருளாதார தன்னிறைவு! |
| முதலுதவி! | அகதிகள் சேவை! | கல்விச் சேவை! |
| இரத்த தானம்! | உள்ளூர் உற்பத்தி ஊக்குவிப்பு! | சமூக அபிவிருத்தி! |
| வைத்திய சேவை! | சுய தொழில் முயற்சிகள்! | தன்னிறைவான சமுதாயம்! |

உங்கள் அன்பளிப்புக்கள் நம்நாட்டிற்கு நன்மை தரும்

**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்**
**வட மாவட்டங்கள்.**

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(ஏ-1607)

# ★ அமெரிக்க பிரஜைகள் இருவரின் கை, கால்களை வெட்டுமாறு

# பாக். நீதிமன்றம் உத்தரவு!

(புதுடில்லி)

பாகிஸ்தானில் கடந்த ஜூன் மாதம் இடம்பெற்ற வங்கிக்கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்ட இருவரின் கைகளையும், கால்களையும் வெட்டிவிடுமாறு பாகிஸ்தான் சிறப்பு நீதிமன்றம் ஒன்று ஆணையிட்டிருக்கிறது.

இஸ்லாமிய சட்டத்தின்படி இவர்களின் வலதுகைகளும், இடதுகைகளும் வெட்டப்படும் என்று நீதிமன்ற உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக்கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்ட இருவரும் அமெரிக்கப் பிரஜைகளாக மாறியவர்களாவர்

பாகிஸ்தானியர்கள் அல்லாதவர்களுக்கு இஸ்லாமிய சட்டப்படி இத்தகைய தண்டனை வழங்கப்படுவது பாகிஸ்தானின் வரலாற்றில் இதுவே முதல்தடவையென தெரிவிக்கப்படுகிறது.

## சர்வதேச

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக அமைச்சர் தொண்டமான் புலிகளுக்கு எழுதியகடிதத்திற்கு பதில் கடிதம் அனுப்பும்போது தாம் இதனைகுறிப்பிடவுள்ளதாகபுலிகள் வட்டாரங்கள் தெரிவித்ததாகவும் அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

அமைச்சர் தொண்டமானுக்கு புலிகள் பதில் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## இந்திய இலங்கை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தனது நாட்டுக்குள்ளேயே பிரச்சனைக்கு தீர்வு காண பலத்த போராட்டத்தை நடாத்திக்கொண்டிருக்கிறது.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திட்டபின் பல சம்பவங்கள் நடந்து முடிந்துவிட்டன. அமைதிப்படை வெளியேறிவிட்டது. இலங்கை அரசு தனது நாட்டுக்குள்ளே பிரச்னைக்கு தீர்வு காண பகீரதப் பிரயத்தனம் செய்கிறது.

எங்களுக்கும் பல பிரச்னை எழுந்துள்ளது. அதற்காக தமிழக அரசுடன் இணைந்து செயற்படுகிறோம் என்றும் கூறினார். [சி]

## புலிகள் விவகாரத்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெலேரோ சென்னையில் செய்தியாளரிடையே பேசும்போது கூறினார்.

இதேவேளை திரு. ராஜீவ் காந்தி கொலை சம்பந்தமாகப் பயனுள்ள தகவல்களை இலங்கை அரசு தமது உதவியுள்ளதாகவும் இணையமைச்சர் கூறினார்.

# அனலைதீவில் தேடுதல் பொருட்கள் கொள்ளை

[யாழ்ப்பாணம்]

அனலைதீவுப் பகுதி இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு வீடுவீடாகப் பலத்த தேடுதல்வேட்டை நடாத்தப்பட்டது.

இத்தேடுதலின்போது வீடுகளிலிருந்த ரொக்கப்பணம் உட்படப் பல பெறுமதியான பொருட்கள் படையினரால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

கடந்த திங்கட்கிழமை இத்தேடுதல் வேட்டை நடாத்தப்பட்டது.

ஆயிரத்துக்குமதிகமான படையினர் இங்குள்ள வீடுகளுக்குச் சென்று வீட்டிலிருந்த அனைவரையும் கைது செய்து தம்முடன் அழைத்துச்சென்று துறை முகப்பகுதியில் பலமணிநேரம் தடுத்துவைத்த பின்னர் விடுதலை செய்துள்ளனர்.

இந்தத் தேடுதல் நடவடிக்கையின்போது கொள்ளையடிக்கப்பட்ட பொருள்கள்தொடர்பாக பிரஜைகள் குழு ஊடாக இராணுவ அதிகாரிகளிடம் புகார் செய்யப்பட்டுள்ளது. (72)

## திலீபனின் 4வது

1-ம் பக்கத் தொடர்ச்சி)

கம் செய்த நல்லூர்கந்தசுவாமி ஆலய முன்றலில் காலை 10-48 மணிக்கு அனைத்து மக்களும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினார்கள்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கலை-பண்பாட்டுப் பிரிவுப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை தியாகி திலீபனின் உருவப்படம் வைக்கப்பட்டிருந்த மேடையில் நின்று சத்திய வாக்குகளைக் கூறியபோது அங்கு நின்ற அனைத்து பொது மக்களும் அவர்கூறிய வசனங்களை எழுந்துநின்று உரத்த குரலில் கூறினார்கள்.

தியாகி திலீபனின் உருவப் படத்துக்கு போராளிகளும் காவல்துறையினரும் பொது மக்களும் மலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலுமிருந்து திலீபனின் இறுதியாத்திரையை சித்தரிக்கும் விதத்தில் பல ஊர்திகள் பவனிகளுடன் தூக்குக்காவடி ஒன்றும் நல்லூர் நோக்கி வந்தது.

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் சிரமதானம், அன்னதானம் போன்றவை நடைபெற்றதுடன் பல இடங்களில் தண்ணீர் பந்தல்களும் நிறுவப்பட்டிருந்தன. (வி)

## வேண்டுகோள்

[வடமராட்சி]

யாழ். மாவட்டம் தவிர்ந்த ஏனைய இடங்களிலுள்ள அனைத்து சட்டத்தரணிகளும்இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பிரதேச காவல் துறைப் பணிமனைக்கு சமுகமளிக்குமாறு காவல்துறைப் பொறுப்பதிகாரி திரு.நடேசன் வேண்டுகோள்விடுத்துள்ளார். [51]

## வீரவணக்கம்

[யாழ்ப்பாணம்]

மணலாறு மாவட்டத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் கடந்த 25-ம் திகதி சின்ன மருது 'தேவராசா சிவகுமார், யோகபுரம், உரும்பிராய்) வீரமரணமடைந்தார். இவருக்கு புலிகள் தமதுவீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்

## பிரேமா

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கட்சி அதிருப்தியாளர்கள் எதிர்க்கட்சிக்கு ஆதரவு கொடுப்பார்களென்றும், அதனால் பிரேமதாசாவின் அரசு கவிழும் என்றும் எதிர்க்கட்சியினரைக் கொண்டு தான் மீண்டும் ஆட்சியை அமைத்துக் கொள்ளும் நிலை திரு. பிரேமதாசாவிற்கு ஏற்படுமென்றும் திரு. அமரதுங்க மேலும் தெரிவித்தார்.

இதேவேளை தற்போது பதவி யிழந்துள்ள ஈழவர் ஜனநாயக முன்னணி உறுப்பினர்களை மீண்டும் பாராளுமன்றம் கொண்டுவர அரசு முயற்சிப்பதாகவும் அவர்களும் வந்து சேரும் பட்சத்தில் திரு. பிரேமதாசா அரசுக்கு மேலும் சிக்கல் நிலை ஏற்படுமென்றும் ஒட்டுமொத்தத்தில் அரசு கவிழுவது நிச்சயமாகிவிட்டதாக நவசமசமாஜக்கட்சி தெரிவித்துள்ளது.

## புலிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் இக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாகவும் அடுத்தநடவடிக்கை குறித்து விரைவில் முடிவு செய்யப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதி பிரேமாவுக்கு எதிரான குற்றப்பிரேரணை இனப்பிரச்னைத் தீர்வை தாமதப்படுத்துமென்றும் திரு. தொண்டமான் தெரிவித்துள்ளார். (சி)

## தமிழர் தாயகத்தை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரபாகரன் கூறியுள்ளார்:

அரசாங்கம் ஒற்றையாட்சியின்கீழ்பிரச்சனையைத்தீர்க்கும் நிலையில் இருந்து மாறவில்லை. இதனால் எமக்கும் சிங்கள அரசாங்கத்துக்கும் பெரிய இடைவெளி இருக்கிறது. அப்படியானால் எப்படிதீர்வு ஏற்படும். தேசிய பிரச்னை, தேசிய இனம், தாயக பூமி, தன்னாட்சிஉரிமை என்ற அடிப்படையில்தான் பேச்சுவார்த்தை அமையும்.

### பிரபாவுடன் சந்திப்பு

நேற்று 3 மணித்தியாலம் தலைவரோடு இன்றைய அரசியல் சூழ்நிலைபற்றி பேச்சு நடத்தினேன்.

ஒருபக்கம் இன்று இராணுவ ரீதியில்போராடுகிறோம் பெரிய அளவில் யுத்தம் நடக்கிறது. மறுபுறத்தில் பேச்சுவார்த்தைக்கு இலங்கை அரசாங்கம் முன்வாருங்கள் என்கிறது. பொருளாதாரத் தடையினால் அத்தியாவசிப் பொருட்களின் விலை மலைபோல் உயர்ந்துள்ளது இந்தக் கட்டத்தில் மக்கள் இந்தப் பெரும்பழுவைச் சுமக்கிறார்கள்பொருளாதாரத் தடைபோன்ற பெரும் பழுவில் இருந்து நீங்க அரசியல் ரீதியாக முயற்சிகள் செய்துவருகின்றோம்.

### பேச்சுக்குத் தயார் என்றோம்

கடந்த டிசம்பர் மாதத்தில் யுத்தநிறுத்தம் செய்து பேச்சுவார்த்தைக்கு தயார் என்றோம். எமது மக்கள் எதிர்கொள்ளும் துன்பங்கள், துயரங்கள், அழுத்தங்களை மனதில் கொண்டும், சர்வதேச அரங்கில் எமக்கு அழுத்தம் கொடுத்து ஒரு திட்டத்தை முன் வையுங்கள் என்று கேட்டபடியால் நாம் இந்நிலைப்பாட்டுக்கு வந்தோம்.

இக்கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டாலும்கூட பறவாயில்லை என்று தலைவர் சொன்னார். ஆனால் சிங்கள அரசாங்கம் தவறாகப் புரிந்துகொண்டது. இராணுவ ரீதியாக நாம் பலவீனமடைந்திருக்கிறோம் என்றும், இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி புலிகளைப் பலவீனப்படுத்தலாமென எண்ணி இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டது.

### தொண்டமான் முயற்சி

சமரச முயற்சிக்கான சமிக்ஞைகள் கொடுக்கப்பட்டன. தொண்டமான் ஒரு பிரதிநிதியாக முன்வந்தார்.

யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தைக்கு வாருங்கள் என்று தொண்டமானுக்கு அழைப்பு விடுத்தோம். பாதுகாப்புக் கொடுங்கள் என்றார். விடுதலைப்புலிகள் இயக்கம் பாதுகாப்பு வழங்கும் என்றோம். பின்பு அவரிடமிருந்து பதில் இல்லை.

### மணலாறு போர்

மணலாறில் பெரும் போர் ஒரு மாதமாக நடக்கிறது. ஏழாயிரம், எண்ணாயிரம் சிங்களத் துருப்புகள் போரில் ஈடுபட்டுள்ளன. அவர்களால் ஒரு மைல்கூட முன்னேறமுடியவில்லை. இந்தப் போரில் பல போராளிகள் குண்டு வீச்சினால் மாவீரர்களாகியும், காயப்பட்டும் உள்ளார்கள். எப்படியிருந்தாலும் பல உயிர்ச் சேதங்கள் மத்தியில் முன்னேற முடியாது சிங்களப் படைகள் திணறுகின்றன.

மீண்டும் தொண்டமான் சமரசமுயற்சிக்காகதலைவர்பிரபாகரனுக்குக் கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்தில் சில யோசனைகளையும் தெரிவித்திருந்தார்:

தமிழ் மக்களின் தேசிய பிரச்சனைக்குத் தீர்வாக என்ன முன்வைக்கப் போகிறீர்கள். பதில் யோசனை உண்டா என்றும் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

### அரசியல் நெருக்கடி

இன்று தென்னிலங்கையில் ஒரு அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது மூன்று கதாநாயகர்கள் இருக்கிறார்கள். ஒருவர் லலித். மற்றவர் காமினி. அடுத்தவர் பிரேமதாசா.

லலித் பன்னிரண்டு ஆண்டுகள் பந்தோபஸ்து அமைச்சராக இருந்தவர். 25,000 தமிழ் மக்களைக் கொன்று குவித்தவர். குமரப்பா, புலேந்திரன் உட்படப் பன்னிரண்டு போராளிகளைக் கொழும்புக்குக் கொண்டு வருமாறு அழுத்தம் கொடுத்தவர். கொண்டு வராதுபோனால் அமைச்சரவையிலிருந்து ராஜினாமாச் செய்வேன் என அன்றைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவைப் பயமுறுத்தியவர். இவர் ஒரு இனத்துவேசி.

காமினி திசநாயக்கா யாழ்ப்பாணத்துக்கு நேரடியாக வந்து நின்று யாழ். நகரைத் தீயிட்டதோடு, அருமை பெருமை வாய்ந்த நூலகத்தையும் எரித்துச் சாம்பராக்கியவர். மகாவலித்திட்டம் ஒன்றைப் புகுத்தி கிழக்கு மாகாணத்தில் சிங்களக் குடியேற்றத்தை நடத்தியவர்.

பிரேமதாசவும் நன்மை செய்யவில்லை அழிப்புக்குக் காரணமானவர். இவர்களிடையே ஏற்பட்டுள்ள போட்டி மனப்பான்மை தான் இன்றைய நெருக்கடிக்குக் காரணமாகும்.

இந்திய அரசாங்கம் இந்த நெருக்கடிக்குப் பின்நிற்கிறது.

### ஈரோஸ் எம். பி.க்கள்

யாழ். குடாநாட்டில் ஈரோஸ் பாராளுமன்ற உறுப்பினர்களைக்கொண்டு சிலவற்றை அரசியலில் செய்யலாம் என்று சிந்திக்கிறோம்.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து, யுத்த நிறுத்தம் செய்து, பொருளாதாரத் தடையை நீக்குவதாக இருந்தால் மீண்டும் சுயேச்சை பாராளுமன்ற உறுப்பினர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்பலாம்.

தொண்டா, பிரேமா அரசியல்தீர்வு என்று பேசும்போது உலகமும் சமாதானம் என்கிறது. மணலாறில் போர் நடக்கிறது. வடக்கு-கிழக்கு துண்டாட முயற்சிக்கப்படுகிறது. இராணுவ மேலாதிக்கத்தின் மத்தியில் பிரேமதாசா பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழைத்தால் நாங்கள் போகத் தயாரில்லை என்று தலைவர் பிரபாகரன் சொல்லியிருக்கிறார்.

### இலட்சியத்தில் வெல்வோம்

பிரேமதாசா புலிகளை வெல்லமுடியாது என்று உணர்ந்து சமாதானப் பாதைக்கு வந்தால் நாமும் சமாதனப் பேச்சுக்கு போகத்தயாராக இருக்கிறோம்.

விடுதலைப் புலிகள் இயக்கம் கொள்கையில் உறுதியானவர்கள். இலட்சியப் பற்றுள்ளவர்கள். நாங்கள் கடைப்பிடிக்கும் வடிவங்கள், அணுகுமுறைகள் மாறுபட்டாலும் இலட்சியம் மாறுபடாது. ஒருபோதும் சந்தர்ப்ப வாதத்தில் இறங்கமாட்டோம்.

எமது மக்கள் நீண்ட காலமாக அழிவுகள், துன்பங்களைச் சந்தித்திருக்கிறார்கள். என்றோ ஒரு காலம் நிரந்தரமான தீர்வுக்கு, இலட்சியத்தை அடைவதற்கு. தர்மம், நீதி, சத்தியம் பக்கபலமாகவுள்ளது. எமதுபக்கத்தில் தர்மம், நீதி, சத்தியம் உள்ளபடியால் நாம் எமது இலட்சியத்தில் வெல்வோம்'' என்றார். (152-56)

## மரண அறிவித்தல்

### திருமதி பற்றிமா லீலாவதி செபஸ்தியாம்பிள்ளை

[இளைப்பாறிய ஆசிரியை, புனிதமரியாள் பாடசாலை, ஊர்காவற்றுறை]

திருமதி பற்றிமா லீலாவதி செபஸ்தியாம்பிள்ளை [இளைப்பாறிய ஆசிரியை, புனிதமரியாள் பாடசாலை, ஊர்காவற்றுறை] 25-09-91 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. B. J. மரியாம்பிள்ளை [சிங்கப்பூர் பென்ஷனியர்], திருமதி சபீனா மரியாம்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும், ஞானமுத்து செபஸ்தியாம்பிள்ளை [கனடா] யின் அன்பு மனைவியும், மரிய சேவியர் பியோ [சம்பத்தரிசியார் கல்லூரி மாணவன்], அனு அன்ரனற், [புனிதமரியாள் பாடசாலை மாணவி, ஊர்காவற்றுறை] ஆகியோரின் அன்புத் தாயாரும், சங்கைக்குரிய அருட்சகோதரி அமலி (Sisters of Charity) யின் அன்புச் சகோதரியும், மரிய நாயகம், யேம்ஸ், திரேசம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார். அன்னாரின் பூதவுடல் 28-09-91 சனிக்கிழமை மாலை 3-00 மணிக்கு இலக்கம் 25/1, 4-ம் குறுக்குத் தெருவிலுள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-

திருமதி சபீனா மரியாம்பிள்ளை

[சி- 5410)

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களதுஅச்சகத்தில் 1991-ம் ஆண்டு செப்ரெம்பர் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Regestered as a News Paper at the General Postoffice Lanka under Licence Number B/10336/81